# ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

## முதலாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 60:1-6

பல்லவி: ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்.,

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3:2-3, 5-6,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 2: 1-12)

## திருப்பலி முன்னுரை:

திருக்காட்சிக்குரியவர்களே, ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா திருப்பலியை கொண்டாட உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். உலக செல்வங்களை விட மேலான செல்வமாகிய இறைவனில் மகிழ்ச்சி காண இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. யூதர்கள் அறிந்துகொள்ளாத அரசர் இயேசுவின் பிறப்பை, விண்மீனின் அடையாளத்தைக் கொண்டு கிழக்கத்திய ஞானிகள் அறிந்து கொள்கிறார்கள். குழந்தை இயேசுவின் மேன்மையை உணர்ந்தவர்களாய் அவரைக் கண்டு வணங்கச் செல்கிறார்கள். அனைத்துலகின் அரசராம் இறைவனே, மனிதராக பிறந்திருப்பதை அறிந்து அவருக்கு பொன்னும் சாம்பி ராணியும் வெள்ளைப்போளமும் காணிக்கையாக அளிக்கிறார்கள். அந்த ஞானிகளைப் போன்றே, நாமும் அனைத்துக்கும் மேலாக ஆண்டவருக்கு பணிவிடை செய்யும் மன நிலையைப் பெற்று வாழும் வரம் கேட்டு, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.



## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. உலகின் நற்செய்தியாம் இறைவா,**

உம்மைப் பற்றிய நற்செய்தியை உலகெங்கும் பறைசாற்ற உழைத்து வரும், எம் திருத் தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இயேசுவின் இறைத்தன்மைக்கு சான்றுபகர்பவர்களாக திகழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. மாட்சிமிகு மன்னராம் இறைவா,**

உலக நாடுகள் அனைத்திலும் உமது நல்லாட்சி மலரவும், மக்கள் அனைவரும் உமது திருச்சபையின் வழியாக உம்மை நாடித் தேடவும் தேவையான உதவிகளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. உன்னத ஒளியாம் இறைவா,**

எம் நாட்டு மக்கள் அனைவரும் உண்மை ஒளியாகிய உம்மை அறிந்துகொள்ளவும், உமது ஒளியை நோக்கி தங்கள் சிந்தனைகளை செலுத்தவும் தேவையான ஆர்வத்தை உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. மகிழ்ச்சியின் நிறைவாம் இறைவா,**

நிலையற்ற இந்த உலகின் செல்வங்களைத் தேடி மன நிம்மதியை இழந்து நிற்கும் மக்கள் அனைவரும், நிலையான செல்வமாகிய உம்மில் நிம்மதி காண அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. திருக்காட்சி நிகழ்வின் வழியாக உம் அன்பை எல்லா மக்களக்கும் வெளிப்படுத்திய இறைவா!**

கீழ் த்திசை அரசர்களைப் போன்று, நாங்கள் எளிய மனத்தோடும், திறந்த உள்ளத்தோடும் வாழவும்: எவ்வளவு எதிர்ப்புக்கள், தடைகள் எம் வாழ்வில் வந்தாலும்,தொடர்ந்து உம்மைத்தேடி, எம் வாழ்வில் உம்மைச் சொந்தமாக்கிக் கொள்ள அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**6. அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா!**

தாங்கள் அரசாகளாய் இருந்தும்: மெசியா என்னும் மீட்பரைக்காண, ஏற்றுக்கொள்ள, வழிபட ஆவலோடு நீண்ட பயணத்தை மேற்கொண்டனர். அதேபோன்று எங்களை வழிநடாத்த நீர் கொடுத்துள்ள அனைத்துத் தலைவர்களும் தாழ்ச்சி, உண்மை, நீதி, நேர்மை, தன்னலமின்மை போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், மூன்ற அரசர்களையும், இயேசுவையும் தங்கள் பணி வாழ்வுக்கு மாதிரிகையாகக் கொண்டு எல்லா மக்களின் நலனுக்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் ஆவலுடன் உழைக்கத் தேவையான அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.